சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/**2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | சுமதி |
| கணவர் பெயர் | : | சங்கர் |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. R. வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1ம் எதிரி நடராஜன் என்பவரிடம், என் கணவர் எவ்வளவு ரூபாய் கடன் வாங்கியிந்தார் என்று சொன்னால் என் கணவர் என்னிடம்

ரூ.3,00,000/- கடன் வாங்கியிருந்ததாகவும், அதை திருப்பிக் கொடுத்து விட்டதாகவும் சொல்லியிருந்தார். என் கணவர் கடன் தொகையை திருப்பி கொடுத்ததற்கான ஆதாரவுகள் எதனையும் வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. எனது கணவர் பணம் எதுவும் 1ம் எதிரிக்கு திருப்பி செலுத்தவில்லை என்றும், இந்நிலையில் என் கணவர் பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் பணத்தை 1ம் எதிரியிடம் திருப்பி செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. என் கணவர் உயிரோடு இருந்தவரை 1ம் எதிரிக்கு பணத்தை திருப்பி செலுத்தவில்லை என்றும், அவர் இறந்துபோன பின்னர் 1ம் எதிரி எனக்கும், எனது மகனுக்கும் என் கணவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்த வேண்டுமென ஒரு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்று சொன்னால் ஆமாம். நான் அந்த அறிவிப்பிற்கு பிறகு பதில் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட உடனே நானும், எனது மகனான அ.சா.1ம் மற்றும் 9 நபர்களும் சேர்ந்து கடந்த 16.05.2020ம் தேதி மாலை 03.50 மணிக்கு எதிரிகளின் வீட்டிற்கு சென்று எதிரிகள் இருவரையும் கட்டையாலும், கத்தியாலும் தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது மகனான அ.சா.1ம் மற்றும் 9 நபர்களும் சேர்ந்து கடந்த 16.05.2020ம் தேதி மாலை 03.50 மணிக்கு எதிரிகளின் வீட்டிற்கு சென்று எதிரிகள் இருவரையும் கட்டையாலும், கத்தியாலும் தாக்கினோம் என்று கொரடாச்சேரி காவல் நிலையத்தில் 1ம் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் ஆமாம். மேற்படி 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.1 ஆன என் மகனை போலீசார் நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினார்கள் என்று சொன்னால் ஆமாம். 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கில் இருந்து தப்பிக்க நானும், என் மகனும் சேர்ந்து நடைபெறாத ஒரு சம்பவம் நடைபெற்றதாக சாட்சியமளிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் இருவரும்

எங்களை தாக்கவுமில்லை என்றும், ஜாதி பெயரை சொல்லி திட்டவுமில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.29 17:56:58 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.